**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**MC. No.56/2024.**

Pw2- பாபு த/பெ.முகமது உசேன், வயது– 71

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.10.2025.

எதிர்மனுதாரர் ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 04.55 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 05.25 P.M.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

இவ்வழக்கில் சாட்டசியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை எனவும் மனுதாரர் அழைத்தன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் சரிதான். உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகள் மனுதாரர் சொல்லி தயாரிக்கப்பட்டதில் நீங்கள் கையொப்பம் போட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தெரிந்த சங்கதிகளை நான் சொல்லி கணினி செய்யப்பட்டது தான் முதல் விசாரணை. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் உள்ள வழக்கின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் தாக்கல் செய்த வழக்கின் விவரம் தெரியுமா என்றால் மனுதாரரின்

தகப்பனாரின் நண்பர் நான். மனுதாரரின் தகப்பனார் இறந்துவிட்டார். மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். உங்களுடைய முதல் விசாரணையும் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழக்கோரி தான் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம். குறுக்கு விசாரணையும் அது குறித்து தானா என்றால் ஆமாம். மனுதாரரின் தகப்பனார் பெயர் என்னவென்றால் ஜஹாங்கீர். மனுதாரரின் தகப்பனார் என்ன வேலை செய்து வந்தார் என்றால் பிளாஸ்டிக் பொருட்கள் வியாபாரம் செய்து வந்தார். ஜஹாங்கீருக்கு எத்தனை ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் என்றால் ஒரு ஆண் மற்றும் இரண்டு பெண் பிள்ளைகள். மனுதாரரின் தகப்பனார் எந்த வகையில் உங்களுக்கு பழக்கம் என்றால் அவருடைய கடையில் நான் போய் உட்காருவேன் குறைந்தபட்சம் 25 ஆண்டுகளாக எனக்கும் அவருக்கும் பழக்கம். மனுதாரருக்கு திருமணம் நடநத் வருடம் நினைவிருக்கிறதா என்றால் 2003 என்று நினைக்கின்றேன். மனுதாரருக்கு திருமணத்தின்போது சீர்வரிசை எவ்வளவு போட்டார்கள் என்றால் மனுதாரர் முதல் பெண் என்ற காரணத்தினாலும் மனுதாரரின் தகப்பனார் அப்போது அயல் நாட்டில் பணிபுரிந்த காரணத்தினாலும் மனுதாரரின் திருமணத்தை அவருடைய தகப்பனார் ஆடம்பரமாக நடத்தினார். உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் 4–ம் பத்தியில் 1–ம் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ஒரு மனைவியாக நான் செய்யவேண்டிய அனைத்து பணிவிடைகளையும் உரிய முறையில் செய்துவந்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் அவ்வாறு உங்கள் பணி என்னவென்றால் அது தட்டச்சு பிழையாகும். ஒரு கணவன் மனைவிக்கு செய்யவேண்டிய பணிவிடைகளை

சொல்லவேண்டிய அவசியமும் இல்லை அது குறித்து நீங்கள் சாட்சியம் அளிக்கவேண்டிய அவசியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணத்தின் பயனாக எத்தனை குழந்தைகள் என்று சொன்னால் இரண்டு ஆண் மகன் மற்றும் ஒரு பெண் மகள். திருமணத்திற்கு பின்னார் மனுதாரரும் எதிர்மனுதாரரும் கூட்டு குடும்பத்தில் இருந்தார்களா அல்லது தனிக்குடும்பத்தில் இருந்தார்களா என்றால் தனிக்குடும்பமாக தான் இருந்தார்கள். 2021 மார்ச் மாதம் முன்னர் கணவன் மனைவிக்கு இடையே பிரச்சனை இருந்ததா என்றால் வீடு சம்பந்தமாக பிரச்சனை இருந்தது. மார்ச் மாதம் 2021–ல் காவல் நிலையத்தில் யார் யாருக்கு எதிராக புகார் கொடுத்தார்கள் என்றால் புகார் கொடுக்கவில்லை காவல் நிலையத்தில் பேசிவிட்டு இருதரப்பினரையும் அனுப்பிவிட்டார்கள். மார்ச் மாதம் 2021–ல் ஆலங்காயம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியிருந்தால் அது தவறான சங்கதியா என்றால் சரிதான். காவல் நிலைய விசாரணையின் போது நீங்களும் உடன் சென்றீர்களா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் பேசிய விவரம் குறித்து உங்களுக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான் கேள்விப்பட்ட சங்கதிதான். செட்டில்மெண்ட் ஆவணம் குறித்த செய்தி உங்கள் முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறீர்களா என்றால் எனக்கு தெரியாது. முதல் விசாரணை யாரோ கொடுத்தது தான். மனுதாரரும் எதிர்மனுதாரரும் ஜமாத்தில் பேசினார்களா என்றால் பேசினார்கள். ஜமாத்தில் பேசும்போது எதிர்மனுதாரர் மனுதாரர் யார்யாருடன் தொலைபேசியில் பேசினார் என்ற விவரம் கோரும்போது மனுதாரரே முன்வந்து தன் தொலைபேசி விவரம் குறித்து

கொடுத்துள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. மனுதாரரின் சகோதரரே மனுதாரரின் குணாதசியம் தெரிந்துகொண்டு மனுதாரர் குறித்து சாட்சியம் அளிக்க முன்வரவில்லை எனவும் நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் பிறந்த குழந்தைகள் எதிர்மனுதாரரின் பராமரிப்பில் தான் உள்ளது என்று சொன்னால் பெண் குழந்தை கல்லூரி விடுதியில் மனுதாரரின் பராமரிப்பில் படித்து வருகிறார். ஆண் குழந்தை கல்லூரி விடுதியில் படித்து வருகிறார். மற்றொரு ஆண் குழந்தை எதிர்மனுதாரரின் பராமரிப்பில் தான் இருந்து வருகிறார். மூன்று குழந்தைகளும் எதிர்மனுதாரரின் பராமரிப்பில் தான் இருக்கிறார்கள் எனவும் விவரம் தெரிந்துகொண்டே பொய்யான சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட வீட்டில் தான் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். மனுதாரர் தன் ஆட்களுடன் சென்று எதிர்மனுதாரரை வெளியேற்றி அந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் பொய்யான சங்கதியாகும். எதிர்மனுதாரர் ஆலங்காயத்தில் இல்லை வெளியிடத்தில்தான் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். ஆலங்கயாம் காவல் நிலையத்தில் ஆஷிப்பின் மனைவி தான் மனுதாரருக்கு எதிராக ஆஷிப்புடன் கள்ளத்தொடர்பில் இருப்பதாக புகார் கொடுத்துள்ளார் என்றால் பொய்யான சங்கதியாகும். எதிர்மனுதாரர் தன் மனைவி ஆஷிப்புடன் தகாத உறவில் இருக்கும் காரணத்தினால் தான் சேர்ந்து வாழ மறுத்து வருகிறார் என்று சொன்னால் அது பொய்யான சங்கதி. மூன்று பிள்ளைகளும் எதிர்மனுதாரரின் பராமரிப்பில் வாழ்ந்து வரும்

காரணத்தினால் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்த வழக்கின் விவரம் தெரியாமல் நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur

Chief Judicial Magistrate,
Tirupathur.